# புறநானூறு செப்பும் அசைவ விருந்து

***ரா. அனிதா***
இரண்டாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783198

***ஆய்வுச் சுருக்கம்***

*விருந்தோம்பும் பண்பு தமிழர்களுடன் கூடவே பிறந்த ஒன்றாகும். மாற்றாரின் பசியறிந்து, அவர்களது பசியை ஆற்றுவதை அறங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்தது என்ற மிக உயர்ந்த கொள்கையை உடையவர்கள் தமிழர்கள். நாம் உண்ணுகின்ற உணவைப் புதிதாக வருபவர்களுக்க கொடுத்து உபசரிக்கும் பண்பே விருந்தோம்பல் ஆகும். அவ்வாறு செய்யும் போது தானமும், தர்மமும் தலைகாக்கும் என்று எண்ணி வாழ்ந்தனர். இத்தகைய பெருமை கொண்ட விருந்தோம்பலை நாம் சங்க இலக்கியத்தில் ஒன்றான புறநானூற்றின் வழியே தன்னை நாடி வரும் இரவர்க்கு அசைவ உணவை விருந்தாகப்படைக்கும் பண்பை இவ்வாய்வில் விளக்கப்பட்டுள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *சோழர், குறுநில மன்னர், கடையெழு வள்ளல், விருந்தோம்பல், அசைவம், உணவு.*

**முன்னுரை**

*சிறப்புமிக்க விருந்தோம்பல் தமிழர் பண்பாடுகளில் ஒன்றாகும். விருந்து என்னும் சொல்லிற்கு புதுமை என்று பொருள். விருந்தினர் என்பது புதிதாக வந்து இருக்ககூடியவர்கள். புதியதாக வந்தவர்கள் பசியுடன் இருந்தால் அவர்களின் பசியை தீர்ப்பதற்காக நாம் உண்ணுகின்ற உணவை அவர்களுக்கு விருந்தாக படைக்கும் பண்பையே விருந்தோம்பல் என்கிறோம். இத்தகைய சிறப்புமிக்க விருந்தோம்பல் பண்பை நாம் சங்கிலக்கியத்தில் ஒன்றான புறநானூறில் அசைவ உணவு விருந்தோம்பல் என்பதனை அடிப்படையாக கொண்டு ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**சோழர்களின் வரலாறு**

*சோழர் என்பவர் பழந்தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தர்களுள் ஒரு குலத்தவராவர். சோழ நாடு சோறுடைத்து என்பது பழமொழி என சோறுடைத்த நாடு சோறநாடு ஆகிப் பின் சோழ நாடாகியது என்பர். இவ்வாறு சிறப்பு மிக்க சோழநாட்டை ஆண்ட சோழர்கள் தன்னை நாடி வந்தவர்களுக்கு அசைவ உணவை விருந்தாக வழங்கியதை விரிவாக எனலாம்.*

**நலங்கிள்ளி வழங்கிய அசைவ உணவு விருந்தோம்பல்**

*நெய்யால் தாளித்த ஊன் கலந்த பலவகைச் சோற்றுடன் இனிய சுவையை உடைய ஏனைய பொருட்களையும் நின் பசி நீங்கத் தந்தன்வன் என நலங்கிள்ளியின் விருந்தோம்பல பண்பை,*

> ***'நெய் குய்ய ஊன் நவின்ற***
> ***பல் சோற்றான், இன் சுவையை***
> ***நல்குரவின் பசித் துன்பின்நின்***
> ***முன்னாள் விடே முதுஅறி சிறாஅரும்'***
>
> ***(புறநா-382 : 8-4)***

*என்னும் பாடலடிகள் நலங்கிள்ளியின் விருந்தோம்பல் பண்பை பறைசாற்றுகிறது. மேலும் இதனையே,*

*குறிஞ்சி நிலமக்கள் வரும் விருந்தினர்க்கு சோறு இல்லை என்று கூறமாட்டார்கள். மேலும் வீட்டின் கதவை பூட்டுவதே கிடையாது. அங்கு*

நெய் ஒழுக கறி சோறு சேர்த்துச் சமைத்து அளிக்கின்றனர். விருந்தினர் விருந்து உண்டு எஞ்சிய சோற்றை உண்பது குறிஞ்சிநில மக்கள்[1] என்பது என்னும் குறிஞ்சிப்பாட்டிற்கு ஏற்ப நலங்கிள்ளியின் விருந்தோம்பல் பண்பும் ஒத்துக்காணப்படுகிறது.

நெய்விட்டுப் பொரித்த தாளித்ததையுடைய இறைச்சியையும், மணிபதித்துச் செய்யப்பெற்ற கலத்தில் ஊற்றிய மணம் மிக்க மதுவையும் பிறவற்றையும் வழங்கினார் என குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் விருந்தோம்பப் பண்பை,

**'நெய்யுறப் பொரித்த குய்யுடை நெடுஞ்சூடு,**
**மணிக்கலன் நிறைந்த மணநாறு தேறல்'**

- (புறநா.397 :13-14)

என்னும் பாடலடிகளில் விருந்தாக அசைவ உணவு வழங்கியதை அறிய முடிகிறது.

### கடையெழு வள்ளல்களின் வரலாறு

பேகன், பாரி, காரி, ஓரி, அதியமான், ஆய், நல்லி ஆகியோர்கள் கடையெழு வள்ளல்கள் எனப் போற்றப்படுகின்றனர். இம்மன்னர்கள் அந்த காலத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை ஆண்டவர்கள். தங்களின் கொடை வள்ளல் மூலம் மக்களின் மனதைக் கவர்ந்தனர். மக்களின் மனம் அறிந்து, அவர்கள் சேவையை உணர்ந்து வாரி வழங்கி ஆட்சியை புரிந்த கடையெழு வள்ளல்கள் சிலர் வழங்கி அசைவ உணவு விருந்தோம்பல் குறித்து காணலாம்.

### பாரி வழங்கிய அசைவ உணவு விருந்தோம்பல்

மதுப் பானையைத் திறக்கவும், செம்மறிக் கடாயை வெட்டித் தள்ளவும், காய்ச்சிய அளவில்லாத ஊன் உணவை விரும்பியவாறு வழங்கியவன் பாரி என இவனின் விருந்தோம்பல் பண்பை,

**'மட்டுவாய் திறப்பவும், மைவிடை வீழ்ப்பவும்,**
**அட்டுஆன்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்**
**பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி,'**

- (புறநா.113:1-3)

என்னும் பாடலடிகளில் பாரி அசைவ உணவை விருந்தாக பாடத்ததை அறியமுடிகிறது. மேலும், இதே விருந்தோம்பலை,

காரிகால் வளவனின் அரண்மனையில் சென்ற பொருநருக்கு அங்குள்ள பணிக்காரர்கள் செம்பறியாட்டின் வெந்த தொடைக்கறியை பலமுறை உண்டு மகிழுமாறு உபசரித்தனர்[2] என்னும் பொருநர் ஆற்றுப்படை பாடல்களுடன் பாரி வழங்கிய அசைவ உணவு ஒத்துக் காணப்படுகிறது.

### வல்வில் ஓரி வழங்கிய அசைவ உணவு விருந்தோம்பல்

மான் தசையும் ஆநெய் போன்ற மணமுள்ள மதுவும் கலந்து வழங்கினான். பொன்னும் மணித்திரட்டும் இடைவழியிலேயே எமக்கு வழங்கினான் என வல்வில் ஓரியின் விருந்தோம்பல் பண்பை,

**'தான்உயிர் செகுத்த மான் நிணப் புழுக்கோடு,**
**அண்உருக்கு அன்ன வேரியை நல்கி,**
**தன்மலைப் பிறந்த தாஇல் நன்பொன்,**
**பல்மணிக் குவையொடும் விரைஇ, 'கொண்ம்' எனச்**
**சுரத்திரை நல்கியோனே'**

- (புறநா 152 : 26-30)

என்னும் பாடலடிகள் மூலம் வல்வில் ஓரியின் அசைவ உணவு விருந்தோம்பல் பண்பை விளக்கப்படுகிறது.

### அதியமான் வழங்கிய அசைவ உணவு விருந்தோம்பல்

மகிழ்வூட்டும் மதுவுடன் அமிழ்து போன்ற சுவையுடன் கூடிய ஊன் உணவை வெள்ளிக் கலன்களில் தந்து உண்ணச் செய்தான் அதியமான் என இவன் விருந்தோம்பல் பண்பை,

**"அமிழ்து அன மரபின் ஊன் துவை, அடிசில்**
**வெள்ளி வெண் கலந்து ஊட்டல் அன்றி"**

- (புறநா.390 : 17-18)

என்னும் பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது. மேலும் இதனையே,

***உண்மின் கள்ளே அடுகின்சோறே***
***எறிக திற்றி ஏற்றுமின் புழுக்கே***
***வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிர்ப்ப[3]***

என்னும் பதிற்றுப்பத்து பாடலடிகளும் அதியமான் விருந்தோம்பலுடன் ஒத்துக் காணப்படுகிறது.

## குறுநில மன்னர்களின் வரலாறு

சங்ககால தமிழகத்தில் வேந்தர், வேளிர்களை அடுத்த நிலையில் குறுநில மன்னர்க்ள இருந்தனர். இக்குறுநில மன்னர்கள் வேந்தர்கள் ஆட்சிக்கு உட்பட்டு அவர்களுக்கு வரி செலுத்துபவராகவும் அவர்கள் அரசியலில் தாமும் பங்கேற்று, போர்கலங்களில் வேந்தர்களுக்கு படைத்தலைவராகவும் இருந்தார்.

## குமணன் வழங்கிய அசைவ உணவு விருந்தோம்பல்

ஒடுங்கிப் போன வரிகளை உடைய குடல் நிரம்புமாறு குளிர்ந்ததும், தாளிப்புடையதும், தசையும் நெய்யும் உடையதும், ஆகிய உணவைத் திங்களைச் சூழ்ந்த விண்மீன்களை ஒத்த சிறிய பொன் கலங்களைச் சூழ வைத்து உண்ணச் செய்து பல பொன் அணிகலன்களையும் வழங்கினான் குமணன் என இவன் விருந்தோம்பும் விதத்தை,

***"நெறிகொள் வரிக்குடர் குளிப்பத் தண்ணெனக்***
***குய்கொள் கொழுத்துவை நெய்யுடை அடிசில்,***
***மதிசேர் நார்மீன் போல, நவின்ற***
***சிறுபொன் நன்கலம் சுற்ற இரீஇக்'***

***- (புறநா-160 : 6-9)***

என்னும் பாடலடிகளில் அசைவ உணவை உணவளித்ததை நன்கு உணரமுடிகிறது.

## ஒய்மான் வில்லியாதன் வழங்கிய அசைவ உணவு விருந்தோம்பல்

குட்டையான கால்களை உடைய பன்றியின் கொழுத்த வெண்மையான இறைச்சி யை நல்ல நெய்யுருக்குப் பெய்து காலை உணவுடன் எங்களுக்கு வழங்கினான் என இவனின் விருந்தோம்பல் பண்பை,

***"குறுத்தாள் ஏற்றைக் கொழுங்கண் அவ்விளர்***
***நறுநெய் உருக்கி, நாட்சோறு ஈயா,***
***வல்லன், எந்தை, பசிதீர்த் தல் எனக்'***

***- (புறநா-376:8-10)***

என்னும் பாடலடியில் விருந்தோம்பல் அறியமுடிகிறது. மேலும் இதே விருந்தோம்பலை,

***. சாரல்***
***கானவன் எய்த முளவு மான் கொழுங்குறை***
***தேம் கமழ் கதும்பின் கொடிச்சி, கிழங்கொடு***
***காந்தள்அம் சிறுகுடிப் பகுக்கும்***
***ஓங்கு மலை நாடன், நின் நகையினானே[4]***

என்னும் நற்றினை பாடலடிகளும் ஒய்மான் வில்லிலாதனின் விருந்தோம்பல் பண்புடன் ஒத்துக்காணப்படுகிறது.

## வட்டாற்று எழினியாதன் வழங்கிய அசைவ உணவு விருந்தோம்பல்

வளமான ஊண் துண்டினைச் சொல்வேனே? வளமான மலரினின்றும் இறக்கிய மதுவைச் சொல்வேனா? முயலின் தசையோடு கலந்து நெய்ச் சோற்றைச் சொல்வேனா? வேண்டுமளவு எடுத்துக் கொள்க உணவுப்பொருளை அதனைச் சொல்வேனா? என் பெரிய சுற்றத்தினர் உண்டு மகிழ மேலும் வழங்கினான் என இவனின் விருந்தோம்பல் பண்பை,

***"கொழுந்தடிய சூடி என்கோ?***
***வளநனையின் மட்டு என்கோ***
***குறுமுயலின் நிணம் பெய்தந்த***
***நறுநெய்ய சோறு என்கோ?***
***திறந்து மறந்த கூட்டுமுதல்***
***முகந்து கொள்ளும் உணவு என்கோ?'***

***- (புறநா.396:15-20)***

என்னும் பாடலடிகளில் விருந்தாக அசைவ உணவு வழங்கியதை அறியமுடிகிறது.

## முடிவுரை

தமிழன் பண்பாடுகளுள் மிகப்போற்றுவதற்குரிய செயலாக விருந்தோம்பல் பார்க்கப்படுகிறது. அக்காலத்தில் விருந்தினர் என்பவர் புதிதாக வருபவரையே குறிக்கும். அதாவது முன்,பின் தெரியாதவர்கள் தன்னைத் தேடிவந்தால் அவர்களுக்க உணவளிப்பதையே விருந்தோம்பல் எனக்கருதினர். இதன் அடிப்படையில் தான்

*மன்னர்களும் வாழ்ந்து வந்தனர். தன்னை புதிதாக தேடிவரும் விருந்தினர்க்கும், புலவர்க்கும் பாணனுக்கும் உணவளித்து வேண்டிய பொருளையும் அளித்தனர். அதன் அடிப்படையில் சங்க இலக்கியத்தின் ஒன்றான புறநானூற்றின் வழி நின்று தன்னை நாடி வருபவர்க்கு அசைவ உணவை விருந்தாகப்படைக்கப்பட்ட நிகழ்வை இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது*

**சான்றெண் விளக்கம்**

1. *மாணிக்கனார். அ (ப.ஆ), குறிஞ்சிப்பாட்டு, பா.201-207, ப.337.*
2. *மாணிக்கனார். அ (ப.ஆ), பொருநர் ஆற்றுப்படை, பா.101-107, ப.213.*
3. *பாலசுப்பிரமணியன். கு.வெ (ப.ஆ), பதிற்றுப்பத்து, பா.78 (1-3), ப.71.*
4. *பாலசுப்பிரமணியன். கு.வெ (ப.ஆ), நற்றிணை, பா.85 (8-12), ப.153.*

**துணை நூற்பட்டியல்**


1. *சுப்பிரமணியன் ச.வே., சங்க இலக்கியம் எட்டுத்தொகை (தொகுதி 3) புறநானூறு, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, முதற்பதிப்பு - 21 சூன் 2010.*
2. *பாலசுப்பிரமணியன். கு.வே, பதிற்றுப்பத்து, நியூ செஞ்சரி புக் ஹவுஸ், 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு - 2004.*
3. *பாலசுப்பிரமணியன். கு.வே, நற்றிணை, நியூ செஞ்சரி புக் ஹவுஸ், 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு - 2004.*
4. *மாணிக்கனார். அ., பத்திப்பாட்டு (குறிஞ்சிப்பாட்டு, பொருநர் ஆற்றுப்படை) வர்த்தயானன் பதிப்பகம், ஏ. ஆர். ஆர் காம்ப்ளெக்ஸ் சென்னை, இரண்டாம் பதிப்பகம் - 2001.*